## தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் சென்னை – 6

ந.க.எண். 035316/ஐ/இ1/2026, நாள். 18 .06.2026

பிறப்பிப்பவர் : முனைவர் ச.கண்ணப்பன்

**பொருள்** பள்ளிக் கல்வி – தேசிய நல்லாசிரியர் விருது 2026 – விண்ணப்பங்கள் இணைய தளம் வழியாக பதிவேற்றம் செய்தல் – மாவட்டத் தேர்வுக் குழு உறுப்பினர் – மாநிலப் பிரதிநிதி நியமனம் – தொடர்பாக

**பார்வை** மத்திய அரசின் http://nationalawardstoteachers.education.gov.in என்ற இணைய வழியிலான தகவல்

*****

பார்வையில் காணும் இணையதளத்தில் 2026 ஆம் ஆண்டிற்கான தேசிய நல்லாசிரியர் விருதிற்கு தங்கள் ஆளுகையின் கீழுள்ள அனைத்து வகையான பள்ளி ஆசிரியர்கள் அவர்தம் விவரங்களை நேரடியாக http://nationalawardstoteachers.education.gov.in என்ற இணையதளம் வாயிலாக 10.07.2026 க்குள் விண்ணப்பிக்கத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் ஒவ்வொரு மாவட்டத்திலும், கீழ்கண்டவாறு மாவட்டத் தேர்வுக்குழு அமைக்கப்பட்டு ஆசிரியர்களைத் தேர்வு செய்து மாநிலத் தேர்வுக் குழுவிற்கு தேர்வு பட்டியலை 14.07.2026 முதல் 21.07.2026 தேதிக்குள் இணையதளம் வாயிலாக அனுப்பி வைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மாவட்டத் தேர்வுக் குழுவில் சம்பந்தப்பட்ட மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் தலைவராகவும், மாநிலப் பிரதிநிதியாக ஒருவரும், மாவட்ட ஆட்சியரின் பிரிதிநிதியாக சிறந்த கல்வியாளர் ஒருவரையும் உட்படுத்தி மாவட்ட தேர்வுக் குழுவினை அமைத்து, மாவட்ட நிலையில் விண்ணப்பித்த ஆசிரியர்களின் விவரங்களை பரிசீலித்து, ஒரு மாவட்டத்திற்கு மூன்று ஆசிரியர்கள் வீதம் தேர்வு செய்து, மாநிலத் தேர்வுக் குழுவிற்குப் பரிந்துரைக்கப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்டத் தேர்வுக் குழுவில் சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் முதல்வர் மாநிலப் பிரதிநிதியாக செயல்படுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், மாவட்ட ஆட்சியரின் பிரதிநிதியாக சிறந்த கல்வியாளர் சார்ந்த விவரங்களை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருந்து பெற்று, அவரை மாவட்டத் தேர்வுக்குழு உறுப்பினராக உட்படுத்தி, தேசிய நல்லாசிரியர் விருதிற்கான மாவட்டத் தேர்வுக் குழுவினை அமைத்து தேசிய நல்லாசிரியர் விருதிற்கான நல்லாசிரியரைத் தேர்ந்தெடுக்கும் பணியினை மறுநினைவூட்டலுக்கு இடமின்றி 21.07.2026 மாலை 05.00 மணிக்குள் முடிக்கத்தக்க வகையில் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும், மாவட்டங்களில் இருந்து தேசிய நல்லாசிரியர் விருதிற்கான ஆசிரியர்களின் விண்ணப்பங்களை இணைய வழியில் பரிசீலனை செய்யும் போது, பார்வையில் கண்ட இணையதளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டி நெறிமுறைகளைக் கவனத்தில் கொண்டு, எவ்வித புகாருக்கும் இடமின்றி செயல்படுமாறு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – வழிகாட்டு நெறிமுறைகள்

இயக்குநர்

18/6/26

**பெறுநர்**

முதன்மைக் கல்வி அலுவலர்கள், அனைத்து மாவட்டங்கள் (மின் அஞ்சல் மூலமாக)

**நகல்**

1. மாவட்ட ஆட்சியர்,
   மாவட்ட ஆட்சியர் அலுவலகம், அனைத்து மாவட்டங்கள் (சார்ந்த முதன்மைக்கல்வி அலுவலர் வழியாக).
2. இயக்குநர், மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், செ – 06.

I section S1 seat